Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | |
|---|---|---|
| CALENDAR | Case No. | : CC 189/2017 |
| MISCELLANEOUS | | |
| Preliminary Register | Sessions | : |
| | Prosecution | : PW1 |
| Deposition of Witness for | Defence | : |
| | Court | : |

| | | |
|---|---|---|
| Name | -- | சந்தியாகுநாயகம் |
| Father's Name | -- | மானவேல் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 23rd December 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது மேனாம்பாறையில் குடியிருந்துவருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்துவருகிறேன். கடந்த 12.04.2017 அன்று நான் கேரளாவில் இருந்து பொள்ளாச்சிக்கு இருசக்கர வாகனத்தில் நானும் ரமேஷும் வந்துகொண்டிருந்தோம். 9 மணியளவில் நாங்கள் வேலைக்குவந்துவிட்டோம். சுஜி,ராகுல்,பிரதிஷ், சுரேஷ், முரளி மற்றும் சிலர் இருசக்கர வாகனத்தில் வந்தோம். முதல் நாள் சீட்டு வேலை செய்தோம். 2 ம் நாள் மதியம் உணவு அருந்திவிட்டு சீட்டை பிக்ஸ் செய்துகொண்டிருந்தோம். மருளி மற்றும் ரமேஷ் சீட்டை பெற்று பிக்ஸ் செய்துகொ்ண்டிருந்தார்கள். நானும் பிரதிஷும் சிமெண்ட் சீட்டை அவர்களிடம் கைமாற்றி லீவ் செய்துகொண்டிருந்தபோது, முரளியும் பிரதிஷும் நின்றுகொண்டிருந்த ஏற்கனவே பிக்ஸ் செய்யப்பட்ட சீட் வர்ணம் பூசப்பட்டிருந்ததால் அது உடைந்திருந்தது தெரியவில்லை. அவர்கள் நின்று சிமெண்ட சீட்டை வாங்கி்கொண்டிருந்தபோது மேற்படி ஏற்கனவே பிக்ஸ் செய்யப்பட்டு அவர்கள் நின்று கொண்டிருந்த சீட் உடைந்து அவர்கள் இருவரும் , 40 அடி உயரத்தில் இருந்த மேற்படி சிமெண்ட் சீட்டில் இருந்து கீழே விழுந்து அடுக்கிவைத்திருந்த கருங்கல் தலையில் இடித்து பிரதிஷ்க்கு தலையில் அடித்து காதிலும் மூக்கிலும் இரத்தம் வந்தது. முரளிக்கு 2 கால்களிலும், இடுப்பிலும், கையிலும் அடிபட்டது. முரளியை தனியார் மருத்துவமனையில் அனுமதித்தோம். பிரதிஷ் ஐ தனியார் மருத்துவமனையில் கொண்டு சென்றோம். அங்கு அவர் இறந்துவிட்டதாக கூறியதால் அவரை பொள்ளாச்சி அரசு

மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றுவிட்டோம். இதுசம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அசாஆ.1 ஆகும். நாங்கள் வேலைசெய்தது பொள்ளாச்சியில் உள்ள ஒரு கம்பெனி. முரளி என்பவர் பாஸ்கர் டம் வேலைக்கு சொல்லி ஆஜர் எதிரி பாஸ்கர் எங்களை வேலைக்கு அமர்த்தினார். அவரது மேற்பார்வையில் வேலை பார்த்தோம். பிரேதர விசாரணையின்போது உடன் இருந்தேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | |
|---|---|---|
| CALENDAR | Case No. | : CC 189/2017 |
| MISCELLANEOUS | | |
| Preliminary Register | Sessions | : |
| | Prosecution | : PW2 |
| Deposition of Witness for | Defence | : |
| | Court | : |

| | | |
|---|---|---|
| Name | -- | ரமேஷ் |
| Father's Name | -- | சுந்தரம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 23rd December 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது மேனாம்பாறையில் குடியிருந்துவருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்துவருகிறேன். கடந்த 12.04.2017 அன்று நான் கேரளாவில் இருந்து பொள்ளாச்சிக்கு நானும் சுஜி, ரமேஷ், முரளி, மற்றும் சிலர் ஒரு கம்பெனிக்கு சீட்போடும் வேலைக்கு சென்றிருந்தோம், அங்கு மேலே போடப்பட்ட சீட் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. கேட்டபோது புதிய சீட் என்று ஆஜர் எதிரி பாஸ்கர் கூறிவிட்டார். இறந்துபோனவரும் சுஜும் ஒவ்வொரு சீட்டாக மேற்படி சீட்டின் வழியே சென்றுகொண்டிருந்தார். அவ்வாறு சீட் எடுத்துக்கொண்டு சென்றுகொண்டிருந்தபோது, இறந்த நபரும், முரளியும் சீட் உடைந்து கீழே விழுந்து முரளிக்கு கை, கால்களில் அடிபட்டது. இறந்தவர்க்கு தலையில் அடிபட்டு இரத்தம் வந்தது. கோவை ரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு இருவரையும் எடுத்துச்சென்றோம். பின்னர் இறந்துபோனவர் என்று நான் குறிப்பிட்டவர் இறந்துவிட்டதாக கேள்வியுற்றேன். அவரது பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. பிரேத விசாரணையின்போது உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குகுவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 189/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | சுஜி |
| Father's Name | -- | சந்திரன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 23rd December 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது மேனாம்பாறையில் குடியிருந்துவருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்துவருகிறேன். கடந்த 12.04.2017 அன்று நான் பிரதிஷ்,சனு,ரமேஷ், முரளி , சுரேஷ், ராகுல் ஆகியோர் பொள்ளாச்சில் காஸ்டிங் கம்பெனிக்கு வேலைக்கு வந்தோம். பிரதிஷ்ம் , முரளியும் சீட் உடைந்து கீழே விழுந்துவிட்டார்கள். அப்போது மதியம் நேரம். பிரதிஷ்க்கு கீழே விழுந்து அடிபட்டு காதிலும் மூக்கிலும், முரளிக்கு கால், கைகளில் அடிபட்டது. அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் அவர்களை அனுமதித்தோம். பிரதிஷ் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு இறந்துவிட்டதால் எடுத்துச்சென்றோம். சவக்கிடங்கில் பிரேத விசாரணையின்போது நான் உடன் இருந்தேன். சனு அசா.1 ஐ வேலைக்கு அழைத்தார். அசா.1 ஐ முரளியை வேலைக்கு அழைத்தார். முரளியிடம் வேலை கேட்க ஆஜர் எதிரி கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

நீதிமன்ற கேள்வி

எங்களுக்கு சம்பளம் எதுவும் கொடுக்கவில்லை. முரளிதான் எங்களுக்கு வேலை சொன்னார். ஆஜர் எதிரிதான் எங்களை மேற்பார்வை செய்தார். மேலே இருந்து கீழே விழுந்ததாக சொன்ன இருவருக்கு பாதுகாப்பு என்ன கொடுத்தார்கள் என்றால் எதுவும் கொடுக்கவில்லை.

குறுக்குவிசாரணை இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

**ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்**

**நீதித்துறை நடுவர் எண்.2**

**பொள்ளாச்சி**